# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 143/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.**6 |
| Name | : | **சந்திரசேகரன் (காவல் துணை கண்காணிப்பாளர் ஓய்வு )** |
| Father's / Husband Name | : | **பெருமாள் கவுண்டர்** |
| Address | : | **விழுப்புரம்** |
| Age | : | 62/2025 |

**தேதி : 20.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல துணை கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு நான் பெரம்பலூர் மாவட்ட வணிக குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரிலும், நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 2000ம் வருடம் சென்னை சி.சி.டயூல்யு சி.ஐ.டி. அலுவலகம் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து சி.நம்பர்985/2000 தேதி 29.12.2000 உத்தரவின்படியும் மதுரை சி.சி.டயூல்யு. சி.ஐ.டி. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் ந.க.எண்.01/MSD/CCIW CID/2001 தேதி 05.01.2001ன் படி உத்தரவின்பேரில் பெரம்பலூர் மாவட்ட துணை பதிவாளர் கூட்டுறவு துறை மகாலிங்கம் என்பவரால் 14.12.2000 தேதியிட்ட ந.க.எண்.2144/99 ச.ப. மூலமாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை பெரம்பலூர் CCIW CID காவல் நிலைய குற்ற எண்.1/2001

சட்டப்பிரிவுகள் 408,477(A) and 120(b) IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன். பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையையும் புகாரையும் கனம் அரியலூர் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். புகார் அளித்த துணை பதிவாளர் மகாலிங்கம் இறந்துவிட்டார்.

இவ்வழக்கானது பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுக்கா, சிறுநிலா இருப்பு கைகளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எதிரிகள் ரூ.20,68,137.95 /– கையாடல் செய்ததாக வழக்காகும். இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் கண்ட எதிரிகள் ராமராஜ், முத்துசாமி, சுப்பிரமணி ஆகியோர்களை 12.02.2001 அன்று தகவலின்அடிப்படையில் போலீஸ் பார்டி சகிதம் மேற்படி எதிரிகளை மேற்படி சிறுநிலா தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வைத்து காலை 11.30 மணிக்கு கைது செய்து 16.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பின்பு அவர்களை வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் இவ்வழக்கில் 21.02.2001ம் தேதி இவ்வழக்கில் கண்ட எதிரி வைதீஸ்வரன் என்பவரை தகவலின்படி கள்ளக்குறிச்சி யூனியன் ஆபிஸ் எதிரில் வைத்து காலை 8.00 மணிக்கு கைது செய்து 11.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பின்பு வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு ்அனுப்பிவைத்தேன்.

மேலும் இவ்வழக்கில் புலன் விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் அனைத்து ஆவணங்களையும் பெறவேண்டி துணை பதிவாளர் கூட்டுறவு சங்கம் என்பவருக்கு 19.02.2000ம் தேதி அன்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேலும் இவ்வழக்கின் எதிரி ரெங்கசாமி உடையார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தால் முன்ஜாமீன் பெற்றுள்ளார். மேலும் இவ்வழக்கில் 05.03.2001ம் தேதி சாட்சிகள் கணேசன், சாமிதுரை, அருணகிரி, காத்தவுடையார், அலமேலு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.03.2001ம் தேதி சாட்சிகள் மலராமன், பாக்கியம், பழனியப்பன் , பொன்னம்மாள், சரசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09.04.2001ம்

தேதி சாட்சிகள் மகேஷ்வரி, சின்னசாமி, வசந்தா, பச்சையம்மாள், பெரியசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

16.04.2001ம் தேதி சாட்சிகள் பிச்சைபிள்ளை, வசந்தி, சிவக்குமார், ஆறுமுகம், ஈஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.05.2001ம் தேதி சாட்சிகள் பெருமாள், சரஸ்வதி, ரவி, பெருமாயி, முருகேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.05.2001ம் தேதி சாட்சிகள் முத்துசாமி, ராமவுடையார், செல்லம்மாள், மோகனசுந்தரம், வேணுகோபால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.06.2001ம் தேதி சாட்சிகள், மகாலிங்கம், துணை பதிவாளர் பெரம்பலூர், ஐய்யம்பெருமாள், காலியம்மாள், ஜோதிவேல், அஞ்சலை, சிதம்பரம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09.07.2001ம் தேதி சாட்சிகள் ரெங்கசாமி உடையார், சுப்பிரமணியன், சந்திரன், சம்சுதின், ராமராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12.08.2001ம் தேதி சாட்சிகள் முத்துசாமி, தங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.09.2001ம் தேதி சாட்சிகள் முருகன், சையத் கமால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.10.2001ம் தேதி சாட்சிகள் வைதீஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.10.2001ம் தேதி சாட்சி செல்லகருப்பையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.11.2001ம் தேதி சாட்சி மாணிக்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.11.2001ம் தேதியன்று இவ்வழக்கின் கனம் APP அவர்களின் கருத்துரையை பெற்று சாமிதுரை, பொன்னம்மாள், அலமேலு, ஆறுமுகம், பச்சையம்மாள், பெருமாயி, அஞ்சலை, பிச்சைபிள்ளை, பெருமாள் ஆகியோர்களது கைரேகையை எடுத்து ஆவணங்களுடன் சென்னை CCIW CID காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மூலமாக சென்னை தடய அறிவியல் துறை கைரேகை நிபுணர் அறிக்கைக்கு அனுப்பிவைத்தேன். மேலும் இவ்வழக்கில் கண்ட ஆவணங்களை

30.12.2001ம் தேதி கனம் அரியலூர் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதத்துடன் ஒப்படைத்தேன். மேலும் எனக்கு பணிமாறுதல் வந்ததால் இந்த வழக்கின் கோப்பை மேல் விசாரணைக்கு எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.